## மத்திய கலாசார நிதியம் - 2011

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 இலங்கை கணக்கீட்டுக் நியமங்களுடன் (இ.க.நி.) இணங்காமை

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**கீழே காட்டப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டுக் நியமங்களுடன் (இ.க.நி.) இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.**

| இலங்கை கணக்கீட்டுக் நியமங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) இ.க.நி. 3 | (i) நிதிக் கூற்றுக்களுக்காக கட்டுப்பாட்டுச் சபையின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை.<br>(ii) நிதிக்கூற்றுக்களில் முன்னைய காலப் பகுதிகளின் ஒப்பிடக்கூடிய வகையில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காசுப் பாய்ச்சல் கூற்றில் அதே மாதிரியில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இ.க.நி. 18 | (i) அண்ணளவாக ரூபா 82.50 மில்லியன் கூட்டுத்தொகையான கணக்கிடக்கூடிய காணி மற்றும் கட்டிட விடயங்கள் 3 இன் நியாயமான |

பெறுமதி நிச்சயிக்கப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ii) ரூபா 8,173,900 காப்புறுதிப் பெறுமதியுடைய 21 வாகனங்களின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டி ருக்கவில்லை.

(iii) பெறுமானத் தேய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ள ரூபா 138,538,297 பெறுமதியான இயந்திரங்களையும் உபகரணங்களையும் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும் பாவனைக்கு எடுக்க முடியாத சொத்துக்களை கைதவிர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(iv) ரூபா 21,422,365 பெறுமதியான தளபாடங்கள் பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கணனி மற்றும் உதிரிப்பாகங்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் ஒப்பந்த உபகரணங்கள் என்பன பெறுமானத் தேய்வு செய்யப்பட்டி ருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அறவிடமுடியாக்கடன் ஒதுக்கீடு தொடர்பான நிறுவனம் பின்பற்றியிருந்த கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன், முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடான ரூபா 3,756,339 தொகையே இவ்வாண்டிலும் அறவிடமுடியாக்கடன் ஏற்பாடாக கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட கடன்பட்டோரிடம் கழிப்பதற்குப் பதிலாக கிடைக்க வேண்டிய மீதிகளிலிருந்து கழித்து ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நானாவித வைப்பாக 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கணக்குகளில் பேணப்பட்டு வந்த ரூபா 3,461,463 ஐ வருமானத்திற்கு

எடுப்பது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(இ) விசேட நிதியச் செயற்திட்டமாக நடைமுறைப்பொறுப்பின் கீழ் 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 18,426,279 முன்னைய ஆண்டின் சீராக்கத்தின் மூலம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்தமை மற்றும் ரூபா 4,537,224 ஏனைய வருமானமாக ஆண்டின் வருமானத்திற்கு செலவு வைத்தமை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டி ருக்கவில்லை.

(ஈ) வெளிநாட்டு மானியங்களின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட சீகிரிய நூதனசாலை மூலதனமாக்கப்பட்டு அதற்காக மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத் தேய்வு ஒதுக்கீடான ரூபா 20,122,329 தொகை வருமானச் செலவுக் கணக்கினூடாக சீராக்கம் செய்யப்படாது வெளிநாட்டு வளங்கள் நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு உரிய சொத்துக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) தனியார் கம்பனியொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,382,055 முற்பணத்தை அறவிடுவதற்காக தொடரப்பட்டிருந்த வழக்கை முடிவுறுத்தி ரூபா 4,472,151 தொகையை மத்திய கலாசார நிதியத்திற்கு செலுத்துமாறு 2011 யூன் 30 ஆம் திகதி நீதிமன்றத்தால் கட்டளையிடப் பட்டிருந்த போதும் 2012 ஒக்தோபர் 31 வரை அதனை அறவிட முடியாதிருந்தது. இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 8,500,000 பெறுமதியான வாகனமொன்று ரூபா 5,067,106 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 3,432,894 கணக்குகளில் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2 வெளிநாட்டு நிதிய செயற்திட்டங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,631,478 கூட்டுத்தொகையான பணத்தை 2011 ஆம் ஆண்டில் கிடைத்த நிதியத்திலிருந்து ஈடுசெய்யப்பட்டிருந்ததுடன், அப்பெறுவனவுகள்

மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளிநாட்டு நிதிய செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 15,610,824 மற்றும் வெளிநாட்டு நிதிய செயற்திட்டத்தின் கீழ் ஆண்டில் செலவிடப்பட்ட ரூபா 36,823,600 செலவினம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்காததுடன், அதன் வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றை ஒன்றுகொன்று ஈடுசெய்யப்பட்டு மீதிகள் மட்டும் ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் என்பவற்றிற்கு வழங்கப்பட்டிருந்த 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நாட்பட்ட தீர்க்கப்படாத 28 மீதிகளுக்குரிய ரூபா 536,542 உம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 06 பழைய முற்பண மீதிகளுக்குரிய ரூபா 660,859 உம் 2012 ஒக்தோபர் 31 வரையிலும் தீர்க்கப்படாமல் தொடர்ந்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 28 நிரந்தர ஊழியர்களுக்குரிய அறவீடுகள் நிலுவையாக இருந்த ஊழியர் கடன் மீதிகளான ரூபா 1,257,003 கூட்டுத்தொகை 2011 திசெம்பர் 31 வரையில் 5 ஆண்டுகளுக்கு மேலாக நாட்பட்டிருந்ததுடன், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 366,721 ஆன இடர்கடன் மீதியொன்றும் தொடர்ந்தும் நிலுவையாக இருந்தன.

(இ) அறவிட முடியாதிருந்த 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நாட்பட்ட விழா மற்றும் விசேட முற்பணக் கடன் மீதி ரூபா 1,289,871 ஐ தொடர்ந்தும் அறவிடமுடியாமல் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2 – 28 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் இருந்து வரும் ரூபா 1,658,005 கூட்டுத்தொகையான 16 கடன் மீதிகளும் 1 - 2 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலவீச்சில் இருந்து வரும் ரூபா 419,923 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகளையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| விசேட நிதிய மீதி | 5,797,169 | நிதியம் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட ஆவணங்கள் |
| தலைமை அலுவலகம் மற்றும் 10 பிரதேச செயற்திட்ட அலுவலகங்களின் வங்கி நடைமுறைக் கணக்கு மீதிகள் | 2,400,324 | 6 கணக்குகளின் மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ்களும் அனைத்து மீதிகளின் காலப் பகுப்பாய்வும் |
| விசேட முற்பணம் மற்றும் விழா முற்பணம் | 1,289,871 | பட்டோலைகள் |
| செயற்திட்ட சொத்துக்கள் | 21,422,365 | பொருள் மெய்மையாய்வு அறிக்கை |
| ஊழியர் கடன் - இடர் | 366,721 | காலப்பகுப்பாய்வு |
| கடன்பட்டோர் மீதிகள் - 16 | 1,658,005 | - மேற்படி - |
| தேசத்திற்கு மகுடம் செலவினம் | 8,723,975 | பற்றுச்சீட்டுக்கள், பட்டியல்கள், பொருளிருப்பு சான்றிதழ்கள், கேள்வி கோரல்கள், ஒப்பந்த உடன்படிக்கைகள் |
| காணி மற்றும் கட்டிடங்கள் | 325,250,000 | நிலையான சொத்துப் பதிவேடு |

## 1.2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 11.9 ஆம் பிரிவு | ஆதனக் கடன் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களின் பொறுப்பளித்தல் உறுதி தமக்கு சமர்ப்பிக்கப்பட்ட உடனே திணைக்களத் தலைவரால் தத்துவத்தை அளிக்கும் ஆவணங்களைப் பதிவு செய்து மீள அனுப்புவதற்காக உரிய மாவட்டத்தின் காணிப் பதிவாளருக்கு அனுப்பப்பட வேண்டியதுடன், கடன்தொகை விடுவிக்கப்பட்டு 06 வாரங்களுக்குள் இந்நடைமுறை செயற்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும் 78 உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்டு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 15,568,564 ஆன ஆதனக் கடன் மீதிளுக்குரிய அற்றோனித் தத்துவத்தை பதிவு செய்வதற்காக 2011 திசெம்பர் 31 வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) <u>நிதிப் பிரமாணம்</u><br>371 | (i) 2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத் திற்காக முற்பணமாக மொனராகலை மாவட்ட செயலாளருக்கு ரூபா 4,981,905 உம் தனமல்வில மாவட்ட செயலாளருக்கு ரூபா 50,000 உம் நாடகக் கலைஞர் ஒருவருக்கு ரூபா 400,000 உம் வழங்கப்பட்டிருந்ததுடன், 2011 திசெம்பர் 31 வரையில் அம்முற்பணம் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | | இது நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டமொன்றாக இருந்தமையால் அனைத்து வழங்கல் மற்றும் சேவைகள் பொதுத் திறைசேரியின் கொள்வனவுக் குழு மூலம் செய்யப்பட்டதாகவும் கணக்களி பொறுப்பும் அவர்களுடைய தாகவும் அறிக்கையிடப்பட்டிருந்தது. |
| | | (ii) பிரதேச செயற்திட்டங்களின் செலவினங்களுக்காக 10 செயற்திட்ட அலுவலகங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,259,029 கூட்டுத்தொகையான துணைக் கட்டுநிதி மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை மற்றும் 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தி | வருடாந்த கொள்வனவுத் தேவைப்பாட்டிற்காக நிறுவனத்தால் பிரதான கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். ஆகக் குறைந்தது 03 ஆண்டு காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட கொள்வனவுகள் பிரதான கொள்வனவு திட்டத்தில் பட்டியலிடப்பட வேண்டிய போதும் நிறுவனத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடொன்றில் நிறுவனத்தின் கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.7 போதியளவில் அதிகாரம் பெறப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

அபயகிரி செயற்திட்ட வளவில் இருந்த 10,550 ஸ்தூபி துண்டுக் கற்கள் செயற்திட்ட முகாமையாளரால் தமது சுயவிருப்பின் பேரில் வெளித்தரப்பினருக்கு இலவசமாக வழங்கப்பட்டிருந்தன. அத்துண்டுக் கற்களின் பெறுமதி ரூபா 2,008,500 ஆக இருந்தமை பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 235,009,985 மிகையாக இருந்ததுடன், முன்னைய ஆண்டிற்கான அதனோடு நேரொத்த மிகை ரூபா 207,471,070 உடன் ஒப்பிடும் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 27,538,915 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சுற்றுலா நுழைவுச்சீட்டுக்களின் விற்பனை வருமானம் ரூபா 262,596,258 ஆல் அதிகரித்திருந்த போதும் நிதியத்தின் செயற்பாட்டு செலவினமும் ரூபா 212,605,561 ஆல் அதிகரித்திருந்தமை மிகையில் அதிகரிப்பிற்கு போதியளவில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டில் வழங்கல் மற்றும் பயன்பாட்டுச் செலவின அதிகரிப்பு ரூபா 49.09 மில்லியன் அல்லது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நூற்றுக்கு 237% ஆக இருந்ததுடன், ஏனைய செலவினங்களின் அதிகரிப்பு ரூபா 50.41 மில்லியன் அதாவது சென்ற ஆண்டிற்கு ஒப்பாக 6788% ஆக இருந்தது. சம்பளம் மற்றும் வேதனங்கள் அதிகரிப்பு ரூபா 54.53 மில்லியன் அதாவது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 10% ஆக இருந்ததுடன், ஆதனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் பதிவழிப்புச் செலவினம் ரூபா 10 மில்லியன் அதாவது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 82% ஆல் அதிகரித்திருந்ததன் காரணமாக சுற்றுலா நுழைவுச்சீட்டுகள் விற்பனை வருமானம் ரூபா 262.59 மில்லியனால் அதாவது 34% அதிகரித்திருந்த போதும் செயற்பாட்டு மிகையில் போதியளிலான அதிகரிப்பு தொடர்பில் அது தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 56 அகழ்வு வேலைத்தளங்களும் 85 பாதுகாப்பு வேலைத்தளங்களுமாக மொத்தம் 141 வேலைத்தளங்களில் 159,201 அலகு வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் 19 வேலைத்தளங்களில் 104890 வேலை அலகுகள் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2011 இன் வேலைத்திட்டத்தின் பிரகாரம் ஜேதவன செயற்திட்டத்தில் அரசமரப் பாதுகாப்பு, பாதுகாப்பு அலுவலகத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் ஜேதவன அலுவலகத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல் என்பவற்றிற்காக ரூபா 2,342,251 கிரயத்திலான 291 வேலை அலகுகளைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், அச்செயற்பாடு வேலைத்திட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன், அதற்கான காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(இ) அபயகிரி செயற்திட்டத்தில் பீடத்திற்கு கற்களைப் பரப்புதல், உள்ளே கூம்பகப் பாதுகாப்பு மற்றும் பெரிய விஹாரையின் பௌதீக ரீதியான பராமரிப்பிற்காக ரூபா 18,316,038 கிரயமான 7941 வேலை அலகுகளும் கண்டி செயற்திட்டத்தில் கந்தேபிட்டிய ரஜமஹா விஹாரையில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 725,085 கிரயத்திலான 172 வேலை அலகுகளும் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், ஆண்டின் போது இச்செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 07 செயற்திட்டங்களின் மொத்த மதிப்படப்பட்ட கிரயம் ரூபா 52,483,440 ஆன 18 வேலைத்தளங்களுக்காக 2011 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 19,162 வேலை அலகுகளில் 2011 திசெம்பர் 31 இல் 1897 வேலை அலகுகள் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், அதன் நிதிசார் செயலாற்றல் ரூபா 5,195,780 ஆக இருந்தது. இதன் பிரகாரம் அச்செயற்திட்டங்களில் 2011 திசெம்பர் 31 இல் அடையப்பெற்றிருந்த பௌதீக மற்றும் நிதிசார் செயலாற்றல் 10% இற்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 409,064 கூட்டுத்தொகையான இடர் கடனைப் பெற்றுக்கொண்ட 24 உத்தியோகத்தர்கள் மத்திய கலாசார நிதியத்தின் சேவையிலிருந்து வெளியேறிச் சென்றிருந்ததுடன், அவர்களிடமிருந்து கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆதனக் கடன் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 407,719 ஆன கடன் மீதி 2005 ஆம் ஆண்டிலிருந்து காலாவதியாகியிருந்ததுடன், அக்கடன் மீதியை அறவிடுவதற்காக நிறுவனத்தினால் இதுவரை போதியளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2005 ஆம் ஆண்டிலிருந்து கலாசார அலுவல்கள் அமைச்சினால் மத்திய கலாசார நிதியத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த 32-4369 ஆம் இலக்க ஜீப் வண்டி 2011 ஆம் ஆண்டின் இறுதி வரையில் முறைப்படி மத்திய கலாசார நிதியத்திற்கு பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அபயகிரி சதுரப் பெட்டி பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான ரூபா 4,200,000 பெறுமதியான 100,000 பாதுகாப்புக் கற்கள் வழங்குவதற்கான ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதை நிராகரித்த ஒப்பந்தகாரரின் செயலாற்றல் பிணைப் பொறுப்பினை பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வருடக் கணக்காக பலப்பிட்டியவில் அமைந்துள்ள கருமுனி வளவின் புத்தகக் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள ரூபா 9,381,498 கிரயத்திலான விற்பனைக்காக உள்ள 68 வெளியீடுகளின் 24,735 பிரதிகளை மீளாய்வாண்டின் இறுதி வரையில் விற்பதற்கோ அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 3 முதல் 11 ஆண்டுகளில் கலாச்சார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சில் சேவைக்கு விடுவிக்கப்பட்டிருந்த மத்திய கலாசார நிதியத்தின் பதவியணிக்குரிய 6 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டில் நிதியத்தால் செலுத்தப்பட்டிருந்த அண்ணளவான சம்பளம் ரூபா 1,745,987 ஆக இருந்தது. அவ்வாறே 2007 ஆம் ஆண்டின் போது தென் மாகாணத்தின் நிறுவனமொன்றில் சேவை புரிவதற்காக விடுவிக்கப்பட்டிருந்த மத்திய கலாசார நிதியத்தின் 3 ஊழியர்களுக்கு 2011 ஆம் ஆண்டிற்காக நிதியத்தால் செலுத்தப்பட்டிருந்த சம்பளங்களின் கூட்டுத்தொகை ரூபா 644,675 ஆக இருந்தது.

(எ) நிதியத்தின் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 20,932,071 என நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களிலும் அப்பெறுமதி குறிப்பிடப்பட்டிருந்த போதும் அச்சொத்துக்களின் உரிமை நிதியத்தின் வசம் இல்லாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஏ) சில கொள்வனவாளர்களுக்கு மொத்தமாக சுற்றுலா நுழைவுச்சீட்டுக்களை விற்பனை செய்யும் போது அவர்களிடம் காசோலைகளைப் பெற்றுக்கொள்ளல் அல்லது வங்கிக்கு நேரடியாக அப்பணத்தை செலவு வைத்தல் போன்ற பாதுகாப்பான முறைமைகள் பயன்படுத்தப்படாமல் அதிகளவிலான பெறுமதி பணமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 30 ஆம் திகதியில் மட்டும் அவ்வாறு வழங்கப்பட்டிருந்த நுழைவுச்சீட்டுக்களின் பெறுமதி ரூபா 5,191,100 ஆக இருந்தது.

(ஐ) ஆதிவாசிகள் முகங்கொடுக்கும் சிக்கல்கள் மற்றும் அவர்களின் தேவைப்பாடுகளை ஆராய்வதற்காக 2011 பெப்ரவரி 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் அமைச்சரின் சுற்றுப்பயணம் மற்றும் 1,700 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகளைப் பகிர்ந்தளிப்பதற்கு ரூபா 1,777,307 செலவிடப்பட்டிருந்தன.

## 3.3 பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

நிதியத்தின் 2 பிரதேச செயற்திட்டங்களில் சில வருடங்களாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காணப்படும் 26 வகைக்குரிய 14503 அலகுகளான இருப்பு பொருட்கள் மற்றும் பாவனைப் பொருட்கள் என்பன மீளாய்வாண்டின் இறுதிவரையில் தொடர்ந்தும் பயன்படுத்தாமல் காணப்பட்டது.

## 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) 2000 ஆம் ஆண்டில் சீகிரியா பூங்காவின் தன்னியக்க நீர் தெளிக்கும் முறைமையை நிர்மாணிப்பதற்காக ஒரு தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்ட ரூபா 325,000 ஆன முற்பணம் அவ்வாண்டிலிருந்து தீர்க்கப்படாத முற்பணங்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த நிறுவனம் செயற்படாமல் இருந்ததால் முற்பண பிணை காலாவதியாவதற்கு முன்னர் அத்தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் தீர்க்கப்படாத முற்பணப் பிணை உருவாகியிருந்தது.

(ஆ) சுற்றுலாப் பிரயாணிகளுக்கான நுழைவுச்சீட்டுக்களின் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் 25 இற்கு 1 என்ற அடிப்படையில் வழங்கப்படும் ஊக்குவிப்பு நுழைவுச்சீட்டுக்களின் பெறுமதி 2011 ஆம் ஆண்டு ரூபா 35,883,472 ஆகக் காணப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை சிறப்பாக இருந்தமையினால் உபகார நுழைவுச்சீட்டுக்களை விநியோகிக்க வேண்டிய தேவைப்பாடு எழாமையால் ரூபா 36 மில்லியனுக்கு அண்மித்த வருமானம் நிதியத்திற்குக் கிடைக்காமல் போயிருந்தது.

## 3.5 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதியத்தின் செயற்பாட்டிற்கு நேரடியாகத் தாக்கம் செலுத்தும் 10 சிரேஷ்ட நிலைப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் பல்வேறு பதவிகளுக்கு பதில் கடமையாற்றல் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், 1 தொடக்கம் 9 ஆண்டுகள் வரை பதில் கடமையாற்றும் 18 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 658,521 ஆன தொகை பதில் கடமைக் கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர் எண்ணிக்கை 322 ஆக இருந்த போதிலும் 2011 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான நிரந்தர சிற்றூழியர் எண்ணிக்கை 811 ஆகக் காணப்பட்ட போதும், அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் 276 பேர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். நிறுவனத்தின் அபிப்பிராயம் மற்றும் ஆலோசனைகளை கருத்திற் கொள்ளாது ஊழியர்களின் தேவைப்பாட்டை முறையாக இனங்காணாது, முறையற்ற ரீதியில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டிருந்ததாக முகாமைத்துவத்தால் அறிக்கையிடப்பட்டிருந்தது.

# 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

## 4.1 ஆண்டறிக்கைகளை சபைக்குச் சமர்ப்பித்தல்

நிதியத்தினால் 2005, 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ஆண்டறிக்கை 2012 ஜூன் 30 ஆம் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2011 ஆம் ஆண்டிற்கான நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் எதிர்பார்த்த நிதிச் செயலாற்றல் மற்றும் உள்ளபடியான செயலாற்றல் என்பன 20% தொடக்கம் 224% வரை வீச்சில் விலகியிருந்திருந்தமை அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமை மற்றும் கட்டுப்பாடு குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடன்பட்டோர்

(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(இ) விசேட நிதியப் பயன்பாடு

(ஈ) நிதிக் கட்டுப்பாடு

(உ) கணக்கீடு

(ஊ) சுற்றுலாப் பயணிகளுக்கான நுழைவுச் சீட்டுக்களை அச்சடித்தல், இருப்புக் கட்டுப்பாடு மற்றும் உபகார நுழைவுச் சீட்டுக்கள் போன்றவற்றை விற்பனை செய்தல்,

(எ) பிராந்திய அலுவலகங்களின் கட்டுநிதிக் கட்டுப்பாடு